# 38 வயது நோயாளிக்கு கல்லீரல் மாற்று சிகிச்சை

## மியாட் மருத்துவமனையில் மறுவாழ்வு




மியாட் மருத்துவமனையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் (இடமிருந்து) டாக்டர் ஜார்ஜ் சாண்டி, டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், கல்லீரல் மாற்று சிகிச்சை மூலம் மறுவாழ்வு பெற்ற ஈரோட்டைச் சேர்ந்த பி.சிவகுமார், அவரது மனைவி ஏ.தீபா, மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ்.

சென்னை, பிப். 5: கல்லீரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட ஈரோட்டைச் சேர்ந்த சிவகுமாருக்கு (38) கல்லீரல் மாற்று சிகிச்சை மூலம் சென்னை மியாட் மருத்துவமனை நிபுணர்கள் மறுவாழ்வு அளித்துள்ளனர்.

மியாட் மருத்துவமனையில் முதன்முறையாகச் செய்யப்பட்டுள்ள இந்த கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை தொடர்பாக அதன் நிர்வாக இயக்குநர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை மையத்தின் தலைவர் டாக்டர் ஜார்ஜ் சாண்டி, கல்லீரல்மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணர் பாரி விஜயராகவன் உள்ளிட்டோர் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

"இதயம்-சிறுநீரகத்துக்கு இணையாக பல்வேறு உடல் உறுப்புகளுடன் இணைந்து 500 தனிப்பட்ட இயக்கங்களை கல்லீரல் செய்கிறது. ஹெபடைடிஸ் பி அல்லது சி வைரஸ் தாக்குதல், குடிப்பழக்கம் உள்ளிட்டவை காரணமாக கல்லீரல் சுருக்க நோய் ('சிர்ரோஸிஸ் ஆஃப் தி லிவர்') ஏற்பட்டு கல்லீரல் செயலிழப்புக்கு உள்ளாகிறது. இந்த நிலையில் கல்லீரல் மாற்று சிகிச்சை ஒன்றே தீர்வாகும்.

ரூ.35 கோடியில்...: கல்லீரல் பாதிப்புக்குள்ளோருக்கு முன்கூட்டியே ஆலோசனை அளித்து, செயலிழப்பைத் தடுக்க மியாட் மருத்துவமனையில் ரூ.35 கோடியில் கல்லீரல்-கணைய மருத்துவ சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஈரோட்டைச் சேர்ந்த சிவகுமாருக்கு அண்மையில் கல்லீரல் மாற்று சிகிச்சை செய்யப்பட்டது.

திருச்சியில் மூளைச் சாவுக்குள்ளானவரின் கல்லீரலை தானமாகப் பெற்று, அதை விமானம் மூலம் உரிய நேரத்தில் மியாட் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சிவகுமாருக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டது. அவர் இப்போது நலமாக உள்ளார்" என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.